‘இலட்சியமும், கொள்கையும்தான் முக்கியம்’ என்று சூளுரைத்து

# நெருப்பாற்றில் நீந்தி மீண்டெழுவார், தி.மு.க. தலைவர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, மே 7– இலட்சியமும், கொள்கையும்தான் முக்கியம் என்று சூளுரைத்து நெருப்பாற்றில் நீந்தி மீண்டெழுபவர் தி.மு.க. தலைவர் மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் வெளிவந்துவிட்டன.

சாதனைகளைச் சரித்திரமாக நாளும் நிகழ்த்திக் காட்டியது தி.மு.க.

‘திராவிட மாடல்’ ஆட்சி. ஒன்றிய ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கேள்விக்குறியாக்கிய தமிழ்நாட்டு உரிமைகளைக் காத்த, மீண்டும் பழைய வர்ண தர்மத்திற்கே வகை செய்யத் துடிக்கும் நிலைகளை எதிர்த்து ஓங்கிக் குரல் கொடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில் நடத்தப்பட்டு திக்கெட்டும் பாராட்டப் பெற்ற ஆட்சி - எதிர்க்கட்சியாக அமர வைக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டு வாக்காளர்கள் தந்த அதிர்ச்சியான முடிவுகள் என்பது உண்மை.

நீண்ட அனுபவத்தினைப் பெற்று உழைப்பின் உருவமாகத் திகழுபவர் மானமிகு மு.க.ஸ்டாலின்!

நேர்மையும், நெஞ்சுரமும், அரசியலில் வெற்றி நீண்ட அனுபவத்தினைப் பெற்று உழைப்பின் உருவமாக இன்றும், நாளையும் உள்ள தி.மு.க.வின் தலைவர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்தத் தோல்வி கண்டு சிறிதும் சோர்வடைந்து சுருண்டு விடவில்லை.

இளைஞராக இருந்து பொதுவாழ்வில் ஈடுபட்ட காலம் முதலே நெருப்பாற்றில் நீந்தி மீண்டெழுபவர் அவர்! தேர்தல் முடிவுகள் தமக்குச் சாதகமாக அமையவில்லை என்றாலும், முழுமையாக முடிவுகள் வெளிவரும் முன்பே மூலையில் முடங்கிப் போகாமல், அண்ணா அறிவாலயத்திற்கு நேற்று (4.5.2026) மாலையே வந்து, அந்தத் தோல்வியை வெற்றியாக்கும் மனத்திண்மையுடன் சுருக்கமும், உருக்கமுமான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

“பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்” (குறள் 580)

என்பதற்கேற்ப, அவருக்கே உரித்தான ஒப்பற்ற பரிபக்குவமான அந்த அறிக்கை அவரது உணர்வுகளின் பண்பாடாக அமைந்துள்ளது.

**இலட்சியமும், கொள்கையும் தான் முக்கியம்!**

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்தே ஆட்சி நடத்தினேன்.

**நான் எனது சக்தியை மீறி உழைத்தேன்!**

எனது அரசியல் பொது வாழ்வில் அதிகப்படியான வெற்றியையும் பார்த்துள்ளேன், தோல்விகளையும் சந்தித்துள்ளேன். எனவே, இலட்சியமும், கொள்கையும்தான் முக்கியமே தவிர, வெற்றி - தோல்விகள் மட்டுமல்ல என்று செயல்படக் கூடியவன் நான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும்!

அதனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும்.

இதுவரை மக்களுக்காக சிறப்பான ஆளும்கட்சியாகச் செயல்பட்ட தி.மு.க. - இனி சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும்’’ என்று பிரகடனப்படுத்தியுள்ளார்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



## தி.மு.க. - மு.க.ஸ்டாலினுக்கு எனது ஆதரவு இன்னும் வலுவாக இருக்கும் !

### நடிகர் சத்யராஜ் உறுதி!



தி.மு.க.விற்கும், மு.க.ஸ்டாலினுக்கும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், தோல்வியை கண்டு துவண்டுவிடுபவர் கிடையாது என்றும், தி.மு.க.விற்கும், மு.க.ஸ்டாலினுக்கும் தனது ஆதரவு இன்னும் வலுவாக இருக்கும் என்றும் நடிகர் சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

நடிகர் சத்யராஜ் வெளியிட்டுள்ள காணொலியில், கடந்த 5 ஆண்டுகளில் டெல்லிக்கு அஞ்சாமல் தமிழ்நாட்டிற்கு பல வளர்ச்சித் திட்டங்களை கொண்டுவந்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்று தெரிவித்துள்ளார். இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியவர் மு.க.ஸ்டாலின் என்றும் அவருக்கு மனமார்ந்த நன்றிகள் என்றும் சத்யராஜ் குறிப்பிட்டுள்ளார்.

இனி வரும் காலங்களிலும், தி.மு.க.விற்கும், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தனது ஆதரவு இன்னும் வலுவாக இருக்கும் என்றும் சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசும், தேர்தல் ஆணையமும் இணைந்து 100 தொகுதிகளில் திருட்டு!

# நான் தேர்தலில் தோற்கவில்லை - வாக்கு எந்திரங்களில் முறைகேடு!

## ராஜினாமா செய்ய மாட்டேன் – மேற்கு வங்கத்தில் புயலைக் கிளப்பும் மம்தா!

கொல்கத்தா, மே 7 - நான் தோல்வி அடையவில்லை. எனவே நான் எனது ராஜினாமா கடிதத்தை சமர்பிக்க மாட்டேன். தேர்தல் ஆணைய உதவியோடு வாக்கு எந்திரங்களில் முறைகேடு நடந்துள்ளது. என் வாழ்நாளில் இப்படியொரு தேர்தலை பார்த்ததே இல்லை என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.



மேற்கு வங்க சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இதில் மொத்தம் உள்ள 294 தொகுதிகளில் பா.ஜ.க. 207 இடங்களிலும், திரிணாமூல் காங்கிரஸ் 80 இடங்களிலும், இடதுசாரிகள் 2 இடங்களிலும் வெற்றி பெற்றனர்.

15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த மம்தா பானர்ஜி இந்த தேர்தலில் தோல்வியை சந்தித்துள்ளார். சட்டமன்ற தேர்தலில் தோல்வியை தழுவிய நிலையில், அவர் தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பதவி விலக மாட்டேன் என்று மம்தா பானர்ஜி கூறியுள்ளது மேற்கு வங்க அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொல்கத்தாவில் செய்தியாளர்க்ளுக்கு பேட்டி அளித்த மம்தா பானர்ஜி கூறியதாவது:- “நான் தோல்வி அடையவில்லை. எனவே நான் ராஜ்பவனுக்கு செல்லப்போவது இல்லை. நான் எனது ராஜினாமா கடிதத்தை சமர்பிக்க மாட்டேன். தேர்தல் ஆணைய உதவியோடு வாக்கு எந்திரங்களில் முறைகேடு நடந்துள்ளது.

வாக்கு எண்ணும் மையத்தில் நான் தாக்கப்பட்டேன். நீதிமன்றம் கூட எங்களுக்கு நீதி வழங்க தவறிவிட்டது. என் வாழ்நாளில் இவ்வளவு மோசமான தேர்தலை பார்த்ததே இல்லை” என்றார். மேற்கு வங்க தேர்தலில் 100 தொகுதிகள் திருடப்பட்டு இருப்பதாகவும் மத்திய அரசும், தேர்தல் ஆணையமும் உடைந்தையாக செயல்பட்டதாகவும் மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியிருந்தார்.







தொடர் விடுமுறை எதிரொலி;

# பரளிக்காடு சூழல் சுற்றுலாவில் 4 நாட்களில் 750 பேர் பங்கேற்பு!

## வனச்சரகர் தகவல்!

காரமடை, மே 7- காரமடை வனச்சரகத்திற்கு உட்பட்ட பரளிக்காடு பகுதி மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் பில்லூர் அணைக்கு மிக அருகாமையில் உள்ளது. காரமடை வனத்துறை சார்பில் பரளிக்காடு சூழல் சுற்றுலா பழங்குடியின மக்களின் பங்களிப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. இயற்கை எழில் நிறைந்த பரளிக்காடு கோவை காந்திபுரத்தில் இருந்து 70 கிமீ தொலைவிலும், காரமடையில் இருந்து 30 கிமீ தொலைவிலும் உள்ளது. சனி, ஞாயிற்று கிழமைகள் மற்றும் அரசு விடுமுறை நாட்களில் பரளிக்காடு சூழல் சுற்றுலாவுக்கு பயணிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த சூழல் சுற்றுலாவில் பங்கேற்க HTTPS://COIMBATOREWILDERNESS.COM/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வாயிலாக பதிவு செய்து கட்டணம் செலுத்தி செல்ல வேண்டும்.

இந்த சூழல் சுற்றுலாவில் பங்கேற்கும் சுற்றுலா பயணிகளுக்கு பில்லூர் அணையில் பரிசல் பயணம், பழங்குடியின மக்களின் பாரம்பரிய மிக்க 10க்கும் மேற்பட்ட உணவு வகைகள், அத்திக்கடவு ஆற்றில் மூலிகை குளியல், வனப்பகுதியில் நடைப்பயணம், பழங்குடியினர் வாழ்வை பிரதிபலிக்கும் பாரம்பரிய நடனம் என பல்வேறு வகையில் வனத்துறையினர் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கின்றனர். பரளிக்காடு, பூச்சமரத்தூர், பில்லூர், நீராடி உட்பட பல்வேறு பழங்குடியின கிராமங்களில் இருந்தும் பரிசல் ஓட்டுநர்கள், மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் என ஏராளமான பழங்குடியின மக்கள் இந்த சூழல் சுற்றுலாவால் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதனால் மக்கள் நீர்நிலை களை நாடி செல்கின்றனர். மேலும், சுற்றுலா தலங்களை நோக்கி மக்கள் படையெடுக்க துவங்கி யுள்ளனர். இதனை முன்னிட்டு கடந்த மே 1 ம் தேதி முதல் மே 31ஆம் தேதி வரை தினந்தோறும் பரளிக்காடு சூழல் சுற்றுலா இயங்கும் என காரமடை வனச்சரகர் ஜோசப் ஸ்டாலின் அறிவித்ததை அடுத்து சுற்றுலா பயணிகள் இடையே போதிய வரவேற்பு கிடைத்துள் ளது. இதுகுறித்து காரமடை வனச்சரகர் ஜோசப் ஸ்டாலின் கூறுகையில் தமிழகத்தில் தற்போது பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது.

இதனால் பரளிக்காடு சூழல் சுற்றுலாவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும், வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே பரளிக்காடு சூழல் சுற்றுலா இயங்கி வந்ததால் சுற்றுலா பயணிகள் அதனை வார நாட்களிலும் இயக்க கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை தொடர்ந்து கடந்த மே 1 ம் தேதி முதல் மே 31 ம் தேதி வரை தினம்தோறும் பரளிக்காடு சூழல் சுற்றுலாவை நடத்த மாவட்ட வன அலுவலரிடம் அனுமதி பெறப்பட்டது. இதற்காக ஆன்லைனில் கடந்த ஏப்.30 முதல் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பரளிக்காடு சூழல் சுற்றுலாவுக்கு வருகை தர முன் பதிவு செய்து வந்தனர்.

சுற்றுலாவில் பெரியவர்களுக்கு ரூ.700, 14 வயதிற்கு குறைவான சிறியவர்களுக்கு ரூ.600 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று தினங்களாக தினம் தோறும் சுமார் 250 பேர் என இதுவரை 750 பேர் வருகை தந்தனர். சுற்றுலா பயணிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி இயற்கையை கண்டு மகிழலாம்’’ என தெரிவித்தார்.

# புதுவை மற்றும் காரைக்காலில் மழை!

சென்னை, மே 7- தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருச்சி பொன்மலையில் 10 செ.மீ மழை பெய்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், தமிழகம் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 24 செல்சியஸ் வரை குறைந்தும், ஏனைய தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலையில் பொதுவாக குறிப்பிடத் தக்க மாற்றம் ஏதுமில்லை.

சுமார் 1.5 கிமீ உயரத்தில் தெற்கு மத்தியப் பிரதே சத்தின் மையப்பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை விதர்பா, மரத்வாடா, உள் கர்நாடகா மற்றும் தமிழ்நாடு வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, நாமக்கல், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் கூடிய கன மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்க ளில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக் கூடும்.

# 3 ரயில்வே திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு ஒப்புதல்!

புதுடெல்லி, மே 7 - மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களில் ரூ.23,437 கோடி மதிப்பிலான மூன்று ரயில்வே திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இதன் மூலம் இந்திய ரெயில்வேயின் தற்போதைய ரெயில் பாதை வலையமைப்பு 901 கிலோ மீட்டர்களாக அதிகரிக்கப்படுகிறது.

இந்த திட்டங்களில் நாக்டாமதுரா 3ஆவது மற்றும் 4ஆவது வழித்தடம், குண்டக்கல்வாடி 3ஆவது மற்றும் 4ஆவது வழித்தடம் மற்றும் புர்வால் சீதாபூர் 3ஆவது மற்றும் 4ஆவது வழித்தடம் ஆகியவை அடங்கும். மேலும் இவை 203031ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, முன்மொழியப்பட்ட இந்த திட்டமானது, சுமார் 83 லட்சம் மக்கள் தொகை கொண்ட 4,161 கிராமங்களுக்கான இணைப்பை மேம்படுத்தும்.

இந்தத் திட்டம் மகாகாலேஷ்வர், ரந்தம்பூர் தேசிய பூங்கா, குனோ தேசிய பூங்கா, கியோலாடியோ தேசிய பூங்கா, மதுரா, விருந்தாவன், மந்த்ராலயம் (ஸ்ரீ ராகவேந்திர சுவாமி மடம்), ஸ்ரீ நெட்டிகண்டி ஆஞ்சநேய சுவாமி வாரி கோயில் (காசபுரம்), ஷ்யாம்ஸ்யநாத் கோயில் (காசபுரம்), ஷியாம்சரா கோயில் போன்ற பல முக்கிய சுற்றுலா தலங்களுக்கு ரயில் இணைப்பை மேம்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிலக்கரி, உணவு தானியங்கள், சிமெண்ட், பெட்ரோலிய பொருட்கள், இரும்பு மற்றும் எஃகு, இரும்பு தாது, கொள்கலன்கள், உரங்கள் போன்ற பொருட்களை கொண்டு செல்வதற்கும் இவை இன்றியமையாத வழித்தடங்களாக உள்ளன.

# சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை உயர்வு!

சென்னை, மே 7 - சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 1,840 உயர்ந்து ரூ. 1,12,400க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.230 உயர்ந்து ரூ.14,050க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ரூ.270க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2,70,000க்கும் விற்பனையாகிறது.

# வெற்றி பெற்ற கழக வேட்பாளர்கள் அனைவரும் மக்களைச் சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும்!